# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 94 | 4 Pages | 07.11.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 94 | 4 பக்கங்கள் | 07.11.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இலங்கையில் நடந்த "நாம் 200" நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் வீடியோ உரை புறக்கணிப்பு

இலங்கை, நவ.7

இலங்கை வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு சென்று 200 ஆண்டுகள் ஆவதை நினைவுகூரும் வகையில் அவர்கள் இலங்கைக்கு ஆற்றிய சேவைகளையும், இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கியபங்களிப்பையும்பாராட்டி இலங்கையில் நிகழ்ச்சி நடத்தப்பட்டிருந்தது.

மத்திய அரசாங்கத்தின்பங்களிப்புடன் இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்பாட்டில் 'நாம் 200' என்ற தலைப்பிலான இந்த நிகழ்வில் மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் உள்பட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதில் தமிழக அரசு சார்பில் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்க மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. ஆனால் முந்தைய நாள்வரை அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அன்றிரவு தான் அனுமதி கிடைத்தது.

மறுநாள் காலையில் நிகழ்ச்சி தொடங்கியதால் தங்கம் தென்னரசு அதில் பங்கேற்க செல்ல முடியவில்லை. இதனால் விமான டிக்கெட் ரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாகவாழ்த்துரைவழங்கியவீடியோ பதிவு இந்த நிகழ்ச்சியில் ஒளிபரப்ப அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த வீடியோ உரையை ஒளிபரப்ப மத்திய அரசு ஆட்சேபனைதெரிவித்துதடை விதித்ததால் ஒளிபரப்பு செய்யப்படவில்லை என தெரிய வந்துள்ளது.



முதலமைச்சரின் வீடியோ உரை கடைசி 2 மணி நேரத்துக்கு முன்பு வந்ததால்அதைநிகழ்ச்சியில்சேர்க்க முடியவில்லை என்று காரணம் கூறப்பட்டு உள்ளது. ஆனாலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசிய அந்த உரை தமிழகத்தில் உள்ள பத்திரிகை, தொலைக்காட்சிகளுக்கு செய்தி துறை மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அது வெளியிடப்பட்டது.

இந்த விவகாரம் இப்போது புது சர்ச்சையை கிளப்பி உள்ளது.

அந்த நிகழ்ச்சியில் என்ன நடந்தது என்பது குறித்து இலங்கை மந்திரி ஜீவன் தொண்டைமான் கூறியதாவது:

இலங்கையில் 2ந்தேதி 'நாம்200' நிகழ்ச்சி நடத்தினோம். இது மலையக தமிழர்களை கவுரவப்படுத்த நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகும். இதற்கு பல்வேறு தரப்பினரையும் அழைத்திருந்தோம்.

அதை ஏற்று மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் வந்திருந்தார். மேலும் காங்கிரஸ் எம்.பி. சசிதரூர், பா.ஜனதா முன்னாள் தேசிய செயலாளர் ராம் மாதவ் வந்திருந்தனர்.

தமிழ்நாட்டில் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பிதழ் கொடுத்திருந்தோம். முக்கியமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் அழைப்பு கொடுத்திருந்தோம்.

இதில் தமிழக அரசில் இருந்து நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்க வருவதாக இருந்தது. ஆனால் அவர் வருவதற்கான அனுமதியில் சிக்கல் ஏற்பட்ட காரணத்தால் அவர் வருவது எங்களுக்கு ஊர்ஜிதமாகவில்லை. தங்கம் தென்னரசு வர முடியாததால் நாங்கள் கடைசி நேரத்தில் ஒரு வேண்டுகோள் வைத்தோம்.

இது முக்கியமான நிகழ்வு என்பதால் தமிழக அரசாங்கத்துக்கு பிரதிநிதித்துவம் செய்கிற மாதிரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எங்கள் மக்களுக்கு ஒரு வாழ்த்து செய்தி தரும்படி கேட்டிருந்தோம்.

நாங்கள் கேட்டது கடைசி நிமிஷம் என்றாலும் கூட முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து அவரது உரையை காணொலி மூலம் எங்களுக்கு அனுப்பிவைத்தனர். நிகழ்ச்சி 4 மணிக்கு தொடங்க இருந்த நேரத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உரை எங்களுக்கு மதியம் 2½ மணிக்கு கிடைத்தது.

இதை நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கு சில விதிமுறை உள்ளது. அந்த நடைமுறையில் சிக்கல் ஏற்பட்டது.

இது தொடர்பாக எங்கள் நாட்டு ஜனாதிபதி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி சொல்லி இன்று ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் நீங்கள் கட்டாயம் இலங்கைக்கு வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

நிர்வாக பிரச்சினை காரணமாக தான் இந்த சிக்கல் ஏற்பட்டது. மற்றபடி அவரது செய்தி மக்கள் எல்லோருக்கும் சென்று சேர்ந்துள்ளது.

இது அரசு நிகழ்ச்சி என்பதால் அதற்கென்று விதிமுறைகள் உள்ளது. இலங்கை நாட்டு ஜனாதிபதி, பிரதமர், இந்திய நிதி அமைச்சர் உள்ளிட்டோர் வருவதால் நிகழ்ச்சி நிரலை கடைசி நேரத்தில் மாற்றினால் சிக்கல் வரும். அதனால்தான் நிகழ்ச்சிநிரலில்அவரது உரைஇடம் பெறவில்லை.

இது தொடர்பாக மத்திய அரசிடம் இருந்து என்னிடம் யாரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## கேதார்நாத் கோவிலில் பக்தர்களுக்கு தேநீர் வழங்கிய ராகுல் காந்தி



டேராடூன், நவ. 7

உத்தரகாண்ட் மாநிலத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று தனது 3 நாள் பயணத்தை தொடங்கினார். பயணத்தின் போது கேதார்நாத் கோவிலில் பிரார்த்தனை செய்தும் ஆரத்தியில் ராகுல் காந்தி பங்கேற்றார்.

பின்பு, மலைக்கோவிலில் பிரார்த்தனை செய்ய தங்கள் முறைக்காக காத்திருக்கும் யாத்ரீகர்களுக்கு தேநீர் வழங்கி 'சாய் சேவா' செய்து கொண்டிருந்தார்.

இவ்வளவு பிரபலமான தலைவர் பொதுமக்களுடன் பழகுவதைக் கண்டு வியந்த பக்தர்கள், அவரிடம் செல்ஃபி எடுக்கக் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ராகுல் காந்தி நிராகரிக்கவில்லை.

ராகுல் காந்தியின் கோவில் வருகையின் போது எடுத்த படங்களை காங்கிரஸ் தனது அதிகாரபூர்வ எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் மாநிலங்களில் நாளை தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## தீபாவளிக்கு பிறகு வாகனங்களில் ஒற்றை இரட்டை இலக்க திட்டம்: டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர்



டெல்லி, நவ.7

தலைநகர் டெல்லியில் கடந்த சில நாட்களாக காற்று மாசு அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு நாளும் மாலை 4 மணிக்குப் பதிவுசெய்யப்பட்ட 24 மணி நேர சராசரி காற்றுத் தரக் குறியீடு சனிக்கிழமை 415ஆக இருந்து ஞாயிற்றுக்கிழமை 454 ஆக அதிகரித்து மோசமடைந்தது.

இதன் எதிரொலியால், டெல்லியில் 1ம் முதல் 9ம் வகுப்பு வரை பள்ளிகளுக்கு ஏற்கனவே விடுமுறை அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், நவம்பர்11ம்தேதிவரைபள்ளிகளுக்குவிடுமுறைஅறிவிக்கப்பட்டுள்ளது. 10ம், 12ம் வகுப்புகளை தவிர மற்ற வகுப்புகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்று மாசுவை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக வரும் நவம்பர் 13 முதல் 20 வரை டெல்லியில் வாகனங்களில் ஒற்றை இரட்டை இலக்க திட்டம் அமல்படுத்தப்படும் என்று டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் அறிவித்துள்ளார்.

மேலும், நவம்பர் 20ம் தேதிக்குப் பிறகு இந்தத் திட்டத்தை நீட்டிக்க முடிவு செய்யப்படும் என்றார்.

ஒற்றைப்படை அல்லது இரட்டை எண் தகடுகளின் அடிப்படையில் மாற்று நாட்களில் கார்களை இயக்கப்படுவதே ஒற்றை இரட்டை இலக்க திட்டம் ஆகும்.

## இந்திய ராணுவத்தில் அப்பாச்சி ஹெலிகாப்டர் இணைப்பு



அமெரிக்கா, நவ.7

அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான போயிங்கின் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள் அமெரிக்க ராணுவத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்காவின் ஆதரவு நாடுகளான இங்கிலாந்து, இஸ்ரேல் உள்பட 18 நாடுகள் ராணுவத்தில் இந்த வகை ஹெலிகாப்டர்கள் பயன்பாட்டில் உள்ளன.

கடந்த 2015ம் ஆண்டில் இந்திய விமான படைக்காக 22 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. அவை தற்போது விமானபடையில் சேவையாற்றி வருகின்றன. இதைத் தொடர்ந்து இந்திய ராணுவத்துக்காக ரூ.5,691 கோடியில் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்களை வாங்க 2020ம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதன்படி அமெரிக்காவின் அரிசோனா மாகாணம் மெசா பகுதியில் உள்ள போயிங் ஆலையில் இந்திய ராணுவத்துக்காக அப்பாச்சி ஹெலிகாப்டர்களை தயாரிக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் மாதத்துக்குள் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் இந்திய ராணுவத்தில் ஒப்படைக்கப்பட உள்ளன.

## பில்டர் காபி நிலையம் அமைத்திட மானியத்துடன் கூடிய கடனுதவி பெற விண்ணப்பங்கள் வரவேற்பு: மாவட்ட கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.7

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழக(தாட்கோ) வழியாக ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திட புதியதாக தொழில் தொடங்குவதற்குஏதுவாகஅனைத்துமாவட்டங்களில் பில்டர் காபி நிலையம் அமைத்திட மானியத்துடன் கூடிய கடனுதவி பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி இத்தொழிலை தொடங்க காலி இடமோ அல்லது கட்டிடங்கள் வைத்திருப்பவர்களுக்கு பில்டர் காபி நிலையம் அமைக்கவும், தொழில் முனைவோர்கள் அல்லது அவர்களின் ஊழியர்களுக்கு தேவையான பயிற்சியும் உரிமையாளர் கட்டணம் (Franchise Fees) ரூ.2.00 இலட்சம் முற்றிலுமாக விலக்கும், விற்பனை செய்ய வாங்கும் பொருட்களுக்கு 5% வரை சிறப்பு தள்ளுபடியும், பில்டர் காபி நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படும் மேலும் மாதாந்திர பில்லிங் மென்பொருள் கட்டணம் விலக்குஅளிக்கப்படும். இத்தொழிலினை செய்ய திட்ட அறிக்கை தயார் செய்ய இலவச ஆலோசனைகள் அந்நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படும். 18 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற புகைப்படம் மற்றும் குறிப்பிட்ட சான்றுகளுடன் www.tahdco.comஎன்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இத்தொழிலுக்கு ரூ.6.50 இலட்சம் முதல் ரூ.7.50 இலட்சம் வரை திட்டத்தொகையினை நிர்ணயித்து இதற்குரிய மானியமாக ஆதிதிராவிடர்களுக்கு 30% அல்லது அதிகபட்சம்ரூ.2.25 இலட்சம் எனவும் பழங்குடியினருக்கு 50% அல்லது அதிகபட்சமாகரூ.3.75 இலட்சம் வரை வழங்கப்படும். பயனாளி 5% முதல் 10% சொந்த முதலீடு வங்கியில் செலுத்தி எஞ்சிய தொகை வங்கி கடனுதவி பெற்றுக்கொள்ளலாம்எனமாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்: 501 (ம) 503, 5வது தளம், மாவட்ட ஆடசியர் வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர் 641604. தொடர்புக்கு: அலைபேசி எண்: 94450 29552, தொலைபேசி எண்: 0421 297112.

## மீனவ சமுதாயத்தைச் சார்ந்தபட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணியில் சேருவதற்கான போட்டித் தேர்வில் சிறப்பிக்க ஆயத்த பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ. 7

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் சென்னை, அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் இணைந்து ஆண்டு தோறும் மீன வசமுதாயத்தைச் சார்ந்த 20 பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடிமைப்பணிக்களுக்கான போட்டித் தேர்வில் கலந்து கொள்வதற்கான ஆயத்த பயிற்சியை நடத்தி வருகிறது. மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசுகளான பட்டதாரி இளைஞர்கள் இப்பயிற்சி திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பபடிவம் மற்றும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் www.fisheries.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் இணையதளத்தில்உள்ளவழிகாட்டு நெறிமுறைகளின் படி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, 18.11.2023 பிற்பகல் 05.00 மணிக்குள் ஈரோடு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் 7வது தளம், மாவட்ட ஆட்சியர் கூடுதல் கட்டட வளாகம், பெருந்துறைரோடு, ஈரோடு638011, தொலைபேசி எண்: 04242221912 மின்னஞ்சல் முகவரி: adferode2@gmail.com என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு ஈரோடு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம்.




அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம்டமுத்தூர் பேரூராட்சி மோனகவுண்டர் புதூர் வார்டு ண் 4ல் அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ் புதிய 30,000 லிட்டர் குடிநீர் மேல்நிலைத்தொட்டி அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணியை தொடங்கி வைத்தார்.



கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# தருமபுரி மாவட்டத்தில் வரத்து குறைவால் தக்காளி விலை உயர்வு; விவசாயிகள் மகிழ்ச்சி

தருமபுரி, நவ.7

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சுற்றுவட்டார பகுதி மற்றும் ராயக்கோட்டை பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் வருடம் முழுவதும் சுழற்சி முறையில் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்தப்பகுதியில் விளையும் தக்காளிகளை விவசாயிகள் ராயக் கோட்டை, ஜிட்டாண்ட அள்ளி, ஐந்து மைல்கள், பாலக்கோடு, வெள்ளிச் சந்தை உள்ளிட்ட தக்காளி மார்கெட்டிற்கு கொண்டு வருகின்றனர். இங்கிருந்து உள்ளூர் தேவை போக சேலம், திண்டுக்கல், கோவை, மதுரை, சென்னை உள்ளிட்ட வெளிமாவட்ட மற்றும் வெளிமாநிலங்களுக்கு தக்காளி ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

தற்போது தரமில்லாத தக்காளி விதைகள் விற்பனை செய்வதால் தனியார் தக்காளி நாற்றுப் பண்ணைகள் மூலம் விவசாயிகள் ஒரு நாற்று



ரூ. 1.50 வாங்கி நடவு செய்தனர். இருந்த நிலையில் பாலக்கோடு சுற்றுவட்டார பகுதிகளான பி.கொல்ல அள்ளி, ரெட்டியூர், பொப்பிடி, பெல்ரம்பட்டி, சோமன அள்ளி, கரகூர், திருமல்வாடி, உள்ளிட்ட கிராமங்களில் தக்காளி செடிகளில் வைரஸ் நோய் தாக்குதலால் புள்ளி அழுகல் நோய், ஊசிப்புள்ளி நோய், தண்டு இலைகள் நோய் மற்றும் பழங்களில் கோடுகள் உள்ளிட்டவை பாதிப்பால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டனர்.

இது குறித்து விவசாயிகள்கூறியதாவது:

தினசரி 500 டன் தக்காளி விளைவிக்கப்பட்டது. உள்ளூர் தேவைக்குப் போக தென் மாவட்டங்கள் சென்னை மற்றும் கேரள கர்நாடக மாநிலங்களுக்கு அனுப்புவது வழக்கம். கடந்த சில மாதங்களுக்கு முன்பு தக்காளி விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ரூ. 5 முதல் 7 வரை விற்பனை செய்யப் பட்டது.

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு மார்கெட்டிற்கு தக்காளி வரத்து குறைவால்விலைஉயர்ந்து கிலோ ரூ.25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் பாலக்கோடு, காரிமங்கலம், பெல்ரம்பட்டி, பஞ்சப்பள்ளி, மாரண்ட அள்ளி, கம்பைநல்லூர். உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்வது வழக்கம். நோய் தாக்கத்தால் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் தக்காளி வரத்து கடுமையாக சரிந்துள்ளது.

இதனால் தக்காளியின் கொள்முதல் விலை உயர்ந்து கிலோ தக்காளி மொத்த விற்பனைக்கு ரூ. 25க்கும் சில்லறை விற்பனையாக ரூ. 35க்கும் விற்பனை செய்யப்படுகிறது. 15 கிலோ கொண்ட கூடை தக்காளி ரூ. 320 முதல் ரூ. 360 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் தீபாவளியை யொட்டி தக்காளி விலை உயர வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# இருசக்கர வாகனம் மீது கண்டெய்னர் லாரி மோதி டிரைவர் பலி

தருமபுரி, நவ.7

தருமபுரி மாவட்டம் நல்லம் பள்ளி அடுத்த சிவாடியில் தனியார் பெட்ரோலிய நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்த நிறுவனத்தில் மேச்சேரி பள்ளப் பட்டியைச் சேர்ந்த அம்மாசியின் மகன் வெங்கடேசன் (43) என்பவர் டிரைவராக பணிபுரிந்து வருகிறார்.

பணியைமுடித்துவிட்டு வீட்டிற்கு செல்லும் வழியில் பாகலஅள்ளி அருகில் பெங்களூரு சேலம் தேசிய



நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த கண்டெய்னர் லாரி மோதி படுகாயம் அடைந்த வெங்கடேசன் சம்பவ இடத்திலேயே பரிதப மாக உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய கண்டெய்னர் லாரி டிரைவர் வாகனத்தை நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார். தகவல் அறிந்து வந்த தொப்பூர்போலீஸ்நிலைய போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்

# ஓஎன்ஜிசி நிறுவனம் கேட்டுள்ள அனுமதியை திமுக அரசு நிராகரிக்க வேண்டும்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, நவ.7

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

ராமநாதபுரம் மாவட்டத்தில் 20 இடங்களில் ஹைட்ரோகார்பன்சோதனைக் கிணறுகளை அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி ஓஎன்ஜிசி நிறுவனம்தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திடம் கேட்டுள்ள அனுமதியை உடனடியாக இந்த திமுக அரசு நிராகரிக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

தமிழகத்தில் மீத்தேன் மற்றும் ஹைட்ரோகார்பன் திட்டங்களால் நிலத்தடி நீரும், பெருமளவு விவசாய நிலங்களும் பாதிப்படைவதை முற்றிலுமாக தடுக்கும் பொருட்டு எனது தலைமையிலான கடந்த அம்மா அரசில் காவிரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட



வேளாண் மண்டலமாக அறிவித்து அத்தகைய நச்சுத் திட்டங்களால் தமிழகம் ஒருபோதும் பாதிப்படையா வண்ணம் முற்றுப்புள்ளி வைத்தேன்.

இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் 20 இடங்களில் ஹைட்ரோகார்பன் சோதனைக் கிணறுகளை அமைக்க ஓஎன்ஜிசி நிறுவனம் அனுமதி கேட்டிருப்பது ஏற்புடையதல்ல.

இன்றைய தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அவர்களது முந்தைய ஆட்சியில் துணை முதல்வராக இருந்த போது மீத்தேன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டு, படித்துபார்க்காமல் கையெழுத்திட்டுவிட்டேன் என பின்னர் மாற்றிக்கூறிய வரலாறு உண்டு. ஆகவே கடந்த காலத்தை போல முதல்வர் மு.க.ஸ்டாலின் அலட்சியப் போக்குடன் நடந்து கொள்ள கூடாதெனவும், தமிழகத்தின் வளத்தை பாதிக்கின்ற ஓஎன்ஜிசியின் இந்த செயலுக்கு துணை போகாமல் ஆரம்ப நிலையிலேயே உடனடியாக அனுமதி மறுக்க வேண்டுமெனவும் மக்கள் நலனை கருத்தில் கொண்டு வலியுறுத்துகிறேன் என கூறியுள்ளார்

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# விபத்தில்லா தீபாவளி குறித்து அவினாசியில் தீயணைப்புத்துறையினர் விழிப்புணர்வு

அவிநாசி, நவ.7

அவிநாசியில் தீயணைப்புத்துறை சார்பில் விபத்து, மாசில்லா தீபாவளி கொண்டாடுவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பாக பட்டாசுகளை வெடிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், தீபாவளியன்று காலை 6 முதல் 7 மணி வரை, இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும், சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் குறைந்த ஒலி, மாசு ஏற்படுத்தும் தன்மையுடைய பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும் மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட அமைதி காக்க வேண்டிய இடங்களில் பட்டாசு வெடிக்கக் கூடாது என்று அறிவுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து தீபாவளியை பாதுகாப்பாக கொண்டாடுவது, பட்டாசுகளை வெடிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.

# தாராபுரத்தில் பட்டா கேட்டு விண்ணபித்திருந்த பகுதிகளில் மாவட்ட வருவாய் அதிகாரி ஆய்வு

தாராபுரம், நவ. 7

தாராபுரத்தில் பல ஆண்டுகளாககுடியிருந்துவரும் வீட்டுக்கு பட்டா கேட்டு பொதுமக்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் ஆய்வு மேற்கொண்டார்.

தாராபுரம் நகரில் காமராஜபுரம், வடதாரை, சூளைமேடு, நேரு நகர், குறிஞ்சிப்பாடி, அம்பேத்கர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் பல ஆண்டுகளாக பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர். ஆனால் மேற்கண்ட வீடுகளுக்கு பட்டா இல்லாததால் தெருவிளக்கு, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கூட பெற முடியாமல் தவித்து வருகின்றனர். இதையடுத்து குடியிருக்கும் வீட்டுக்கு பட்டா கேட்டு கலெக்டரிடம் இப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக விண்ணப்பித்து வருகின்றனர்.

இந்நிலையில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் காமராஜபுரம், மஸ்தான் நகர் ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்தார். ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், நகரமன்ற தலைவர் பாப்புக்கண்ணன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 2.50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

தாராபுரம், நவ.7

தாராபுரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்ட அலுவலகம் இணைந்து தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது.

முகாமுக்கு மாவட்ட வருவாய் அதிகாரி ஜெய்பீம் தலைமை தாங்கினார். தனியார் கல்லூரியில் நடந்த வேலைவாய்ப்பு முகாமை தமிழ் வளர்ச்சி செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறைஅமைச்சர்கயல்விழி ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர்.

இந்த முகாமில் 110 தனியார் துறை நிறுவனங்கள்



கலந்து கொண்டன. இதில் 1,023 பேர் பங்கேற்றனர். அவர்களில் 470 பேர் வேலைக்கு தேர்வுசெய்யப்பட்டனர். அவர்களுக்கான வேலை நியமன ஆணையை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கயல் விழி வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

தமிழ்நாடு முதல் அமைச்சராக மு.க.ஸ்டாலின்பொறுப்பு ஏற்றுக் கொண்ட நாள் முதல் அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மூலம் 2.50 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்பட்டு உள்ளது.

அனைவருக்கும் அரசு வேலை என்பது சாத்தியம் இல்லை. இளைஞர்கள் வேலை கிடைக்கவில்லை என்று மனம் தளராமல் முயற்சி செய்யவேண்டும். மேலும் சுய தொழில் தொடங்க அரசு வழங்கும் சலுகைகளை பயன் படுத்தி கொண்டு நீங்கள் நான்கு பேருக்கு வேலை வழங்கும் அளவிற்கு முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் வரலட்சுமி, வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குனர்ஜோதி மணி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சுரேஷ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலதலைவரும், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளருமான இல.பத்மநாபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# டிப்பர் லாரி மீது கார் மோதி பெண் சாவு; 4 பேர் படுகாயம்

கிருஷ்ணகிரி, நவ.7

கர்நாடகா மாநிலம் பெங்களூர் பகுதியை சேர்ந்த 5 பேர் ஒரு காரில் ஒகே னேக்கல் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

அம்போது தேன்கனி கோட்டை மர கட்டா கிராமத்தின் அருகே ஓர் வளைவில் திரும்பும்போது எதிரே வந்த டிப்பர் லாரி மீது நிலை தடுமாறிய கார் மோதியுள்ளது. இதில் காரின் முன்பகுதி நொறுங்கியது. இதில் ஒரு பெண் சம்ப இடத்திலே யே உயிரிழந்தார். மேலும் 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில் தேன்கனிக் கோட்டை போலிசார் விரைந்து வந்து பெண் உடலை கைபற்றி தேன்கனிக் கோட்டை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பினர். படுகாயம் அடைந்த 4 பேரையும் மீட்டு தேன்கனிக் கோட்டை அரசு மருத்துவம னையில் சிகிச்சை அளித்து மேற்கி ச்சைக்காக பெங்களூர் மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் விசாரணையில் இறந்தவர் வைசாலி (54) காயம் அடைந்தவர்கள் இஷான் (32) தினேஷ் (27) பவினா (27) ஹேமந் குமார்( 67) ஆகிய 4 பேர் என தெரியவந்துள்ளது. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தீபாவளி கூட்டத்தால் போக்குவரத்து நெரிசலில் சிக்கி திணறிய திருப்பூர்

திருப்பூர், நவ.7

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில் பண்டிகைக்கு தேவையான பொருட்கள் மற்றும் ஆடைகள் வாங்குவதற்கு பொதுமக்கள் கடைகளுக்கு படையெடுக்க தொடங்கி உள்ளனர். இதனால் திருப்பூரில் முக்கிய சாலையானகுமரன்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. திருப்பூர் மாநகரில் காதர்



பேட்டை, மத்தியபேருந்து நிலையம், மார்க்கெட் சாலை உள்ளிட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகள் கடை அமைத்துள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கே சிரமப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. முக்கிய சாலைகளான காதர் பேட்டை, குமரன் சாலை, மார்க்கெட் சாலை உள்ளிட்டபகுதிகளில்போக்குவரத்து அதிகரித்து வருவதால் கூடுதலாக போலீசாரை நிறுத்தி போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பஸ் நிலையத்தில் பெண் கொலை: பதற வைக்கும் சி.சி.டி.வி., காட்சிகள்

திருப்பூர், நவ.7

திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தில் கடந்த 1ந் தேதி நடுத்தர வயது பெண்ணின் தலையில் சரமாரியாக கத்தியால் குத்திக்கொலை செய்த நபரை பேருந்து நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த தெற்கு காவல் நிலைய போலீசார் பிடித்து விசாரணை மேற்கொண்டனர். இதனிடையே பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடி கொண்டிருந்த பெண்ணை பொது மக்கள் உதவியுடன் ஆட்டோவில் ஏற்றி திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அந்த பெண் உயிரிழந்தார். இதனை தொடர்ந்து பெண்ணை கத்தியால் குத்திய நபரிடம் விசாரணை மேற்கொண்டதில் அவர் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியை சேர்ந்த கணேசன் (வயது 52) என்பதும் ஆக்டிங் டிரைவராக பணியாற்றும் இவர் திருமணமாகாத நிலையில் பழனிக்கு சென்ற போது அங்கு பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்த பவளக்கொடி என்ற சாந்தி (48) என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து சாந்தியை திருப்பூர் அடுத்த கோவில்வழி பகுதியில் குடியமர்த்திய கணேசன் ஒட்டன்சத்திரத்தில் பணியாற்றியபடி சாந்தியுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் சாந்தி மீண்டும்பாலியல்தொழிலில்ஈடுபடுவதைஅறிந்த கணேசன்கடந்த 1ம் தேதி இரவு திருப்பூருக்கு வந்துள்ளார். அப்போது பேருந்து நிலையத்தில் சாந்தி வேறு ஒரு நபருடன் பேசிக் கொண்டிருந்ததை கண்டதும் ஆத்திரமடைந்த கணேசன் காய்கறி வெட்டும் கத்தியால் சாந்தியின் தலை மற்றும் பின் முதுகு உள்ளிட்ட இடங்களில் சரமாரியாக குத்தினார்.

இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த சாந்தி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனையடுத்து கணேசனை போலீசார் கைது செய்தனர். இந்த நிலையில் அந்த கொலை தொடர்பான சிசிடிவி., காட்சிகள் தற்போது வெளியாகி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இது பொது மக்கள் மத்தியில் அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

# அறநிலையத்துறை சார்பில் ரூ.100 கோடி மதிப்பில் 18 திருப்பணிகள் கார்த்திகை மாதம் தொடங்கப்படும்; அமைச்சர் சேகர் பாபு தகவல்



திருச்செந்தூர்:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்த சஷ்டி விழா வருகிற 13ந் தேதி (திங்கட்கிழமை) தொடங்குகிறது.

இதையொட்டி கந்த சஷ்டி திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் தமிழக மீன்வளம் மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் கோவிலில் ஆய்வு செய்தனர்.

முன்னதாக கோவில் வளாகத்தில் ரூ. 49.50 லட்சம் மதிப்பில் யானை நினைவு மண்டபம் கட்டுவதற்கு அமைச்சர் சேகர்பாபு அடிக்கல் நாட்டினார். பின்னர் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் உப கோவிலான வெயிலுகந்த அம்மன் கோவிலில் பசுமடம் கட்டுவதற்கு அமைச்சர் சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து அமைச்சர் சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது:

இந்துசமய அறநிலையத்துறை சார்பில் திருத்தணி, திருவேற்காடு, திருச்செந்தூர் உள்ளிட்ட 4 இடங்களில் பசு மடம் கட்டப்பட உள்ளது. 11 இடங்களில் யானை நினைவு மண்டபம் கட்டப்பட உள்ளது. திருச்செந்தூரில் ரூ. 49.50 லட்சம் மதிப்பில் யானை நினைவு மண்டபம் கட்டப்பட்ட உள்ளது.

எச்.சி.எல். நிறுவனம் சார்பில் ரூ.200 கோடி மதிப்பில் 20 பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் தற்போது 35 சதவீத பணி நடந்துள்ளது.

கந்த சஷ்டி திருவிழாவிற்கு 20 லட்சம் மக்கள் கூடுவார்கள். அதற்காக 16 இடங்களில் 12,500 வாகனங்கள் நிறுத்தும் கண்காணிப்பு காமிரா பொறுத்தப்பட்டு தற்காலிக வாகன நிறுத்தம் அமைக்கப்பட்ட உள்ளது.

100 இடங்களில் புதிதாக கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட உள்ளது. 5 இடங்களில் ஆம்புலன்ஸ் நிறுத்தி வைக்கப்படும். அங்கு மருத்துவ முகாம் நடக்கும். 400 தூய்மை பணியாளர் நியமிக்கப்படுவார்கள். 21 இடத்தில் கொட்டகை அமைக்கப்பட உள்ளது.

30 ஆயிரம் பேர் தங்கி விரதம் இருக்கும் வகையில் கழிப்பறை, குடிநீர் வசதியுடன் அமைக்கப்படும். கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் பெரும் வளாக திட்ட பணி 2025ம் ஆண்டுக்குள் பணி நிறைவடையும். இந்த கட்டுமான பணி சுமார் 50 ஆண்டுகள் எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்கும்.

அரசின் சார்பில் ரூ.100 கோடியில் செயல்படுத்த உள்ள 18 திட்டப்பணிகள் கார்த்திகை மாதத்தில் தொடங்கப்பட உள்ளது. யாத்திரிகர் நிவாஸ் பணிக்கு கூடுதலாக ரூ. 19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 45 நாட்களில் பக்தர்கள் பயன்பாட்டிற்கு வரும்.

சஷ்டிதிருவிழா பக்தர்களுக்கு எந்த இடையூறு இல்லாமல் சிறப்பாக நடத்தப்படும். கோவிலுக்குள் 250 வாகனங்கள் அனுமதிக்கப்படும். வெளியே 12,500 வாகனங்கள் நிறுத்த வழிவகைசெய்யப்படும்.

விரதம் மேற்கொள்ள வருகை தரும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மருத்துவ வசதிகள் சிறப்பாக செய்து கொடுக்கப்படும். கந்த சஷ்டி திருவிழாவின் போது நீதிமன்ற உத்தரவுபடி உள்பிரகாரத்தில் பக்தர்கள் விரதம் இருக்க அனுமதி இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது அவருடன் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், அறங்காவலர் குழு தலைவர் அருள் முருகன், மாவட்ட கலெக்டர் லட்சுமிபதி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முரளிதரன், கோவில் இணை ஆணையர் கார்த்திக் உள்பட உடன் இருந்தனர்.

# சேதமான சாலைகளை சீரமைக்க கோரி ஆசிரியர்கள் மாணவர்கள் மனு



திருப்பூர், நவ.7

திருப்பூர் அணைக்காடு தனியார் பப்ளிக் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில், எங்கள் பகுதியில் உள்ள சாலைகள் போதிய பராமரிப்பின்மை மற்றும் சேதமடைந்துள்ளதால், இந்த சாலைகளில் தினமும் பயணிக்கும் பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

சாலைகளின் தற்போதைய நிலை போக்குவரத்தின் சீரான ஓட்டத்தை பாதிக்கிறது. தாய்மார்கள் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது தவறி குழந்தைகளுடன் கீழே விழுந்த சம்பவங்கள் ஏராளம்.

இந்த சாலையின் முற்றிலும் உடைந்த பள்ளத்தை கடக்க முயன்ற போது தாயின் கட்டுப்பாட்டை இழந்த ஒரு குழந்தை திறந்தவெளி பள்ளத்தில் விழுந்தது மிகவும் அதிர்ச்சியளித்தது. எனவே சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனுவில் கூறியிருந்தனர்.

# ஒரத்தநாடு விற்பனை கூடத்தில் 26ந்தேதி வரை கொப்பரை கொள்முதல்

தஞ்சாவூர், நவ.7

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை கொள்முதல் வரும் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது என விற்பனைக் கூட மேற்பார்வையாளர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தஞ்சாவூர் விற்பனை குழுவுக்கு உள்பட்ட ஒரத்தநாடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிகழாண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் குறைந்தபட்ச ஆதரவு விலையின் அடிப்படையில் விலை ஆதரவு திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ. 108.60 என்ற வீதத்தில் விவசாயிகளிடமிருந்து அரைவை கொப்பரை நேபெட் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை 1602 விவசாயிகளிடமிருந்து 2 ஆயிரத்து 499 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டமானது வரும் 26 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்ய அரசாணை பெறப்பட்டு கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது, சிறு குறு விவசாயிகள் நலனை கருதி அவர்களிடமிருந்து கொப்பரை கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒரத்தநாடு மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

விவசாயிகளின் வங்கிக் கணக்கில் கிரைய தொகையானது நேரடியாக வரவு வைக்கப்படுவதுடன் தரத்தின் அடிப்படையிலேயே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இப்பகுதியைச் சார்ந்த தென்னை விவசாயிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தண்ணீரின்றி கருகிய பயிர்களுக்கு இழப்பீடு கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர், நவ.7

டெல்டா மாவட்டங்களில் நடப்பு பருவத்தில் தண்ணீர் இன்றி பாதிக்கப்பட்ட கருகிய குறுவை நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

சம்பா சாகுபடிக்கான தண்ணீர் உடனடியாக பெற்று தர வேண்டும்.

2022, 23 ஆம் ஆண்டிற்கான பயிர் காப்பீட்டு இழப்பீட்டை மறு ஆய்வு செய்து உரிய இன்சூரன்ஸ் நிதி வழங்க வேண்டும்.

பயிர் காப்பீட்டு திட்டத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் (சி.பி.ஐ சார்பு) கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று காலை தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் தலைமை வகித்தார். மாவட்டச்செயலாளர் பாஸ்கர் முன்னிலை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி ஆர்ப்பாட்டத்தை தொடக்கி வைத்தார். விவசாய சங்கத்தின் தேசிய குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் முடித்து வைத்து பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் சக்திவேல், மாவட்ட பொருளாளர் பாலசுப்பிரமணியன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர்கள் துரை.மதிவாணன், முத்துக்குமரன், அரசு பணியாளர் சங்க மாநில துணை தலைவர் திருநாவுக்கரசு, காவிரி தாய் இயற்கை வழி வேளாண்நடுவம் சீர்.தங்கராசு உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டம் முடிந்த பின்னர் கோரிக்கை மனு கலெக்டரிடம் வழங்கப்பட்டது.

# கந்தர்வகோட்டையில் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியை ஆதிதிராவிடர் நல அலுவலர் ஆய்வு



கந்தர்வகோட்டை, நவ.7

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகாவில் 58 வாக்குச்சாவடி மையங்களில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்ப்பு , பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் க.ஸ்ரீதரன் ஆய்வுகள் மேற்கொண்டு முகாம் அலுவலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். இந்த ஆய்வின் போது கந்தர்வகோட்டை வட்டாட்சியர் ராமசாமி, வட்ட வழங்கல் அலுவலர் உத்திராபதி, கிராம நிர்வாக அலுவலர் தமிழரசன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# மின்சார கட்டண உயர்வை ரத்து செய்ய வலியுறுத்தி அதிமுக எம்.எல்.ஏக்களிடம் தொழில்துறையினர் மனு



கோவை, நவ.7

தமிழ்நாடு தொழில் துறை மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பு கோவை தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு மற்றும் சுழற்சி ஜவுளி கூட்டமைப்பினர் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மற்றும் எம்.எல்.ஏ.க்கள் அம்மன் அர்ச்சுனன், பி.ஆர். ஜி. அருண்குமார், பொள்ளாச்சி ஜெயராமன், ஏ.கே.செல்வராஜ், தாமோதரன், கே.ஆர். ஜெயராம், அமுல் கந்தசாமி, சூலூர் கந்தசாமி ஆகியோரிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் குறு சிறு நடுத்தர தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூலப்பொருள் விலை ஏற்றம் உள்ளிட்ட காரணங்களால் தவித்து வரும் தொழில் நிறுவனங்களுக்கு, தமிழக அரசு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவித்த மின்கட்டண உயர்வு மேலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாங்கள் பயன்படுத்தும் யூனிட் கட்டணம் 20 சதத்துக்கும் மேல் உயர்த்தியும், நிலை கட்டணம் கிலோ வாட்டுக்கு 430 சதம் உயத்தியும், இதுவரை இல்லாத புதிய யுக்தியாக பீக்ஹவர்க்கான கட்டணம் நிரணயம் செய்து 24 மணிநேரத்தில் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் கணக்கீடு செய்து பீக்ஹவர் கட்டணமாக 15 சதம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது.

10 சதவீத லாபம் கூட இல்லாமல் குறு, சிறு நடுத்தர தொழில்கள் இயங்கி வரும் சூழ்நிலையில் கடந்த ஆண்டில் உயர்த்தப்பட்ட 40 சதவீதம் மின் கட்டண உயர்வால் தொழில் துறையினர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில்களை பாதுகாக்கும் பொருட்டாக மக்களின் பிரதிநிதிகளான தாங்கள் தமிழ்நாட்டில் உள்ள 10லட்சம் தொழில்முனைவோர்களின் வாழ்வாதாரமும் ஒரு கோடிக்கு மேல் நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் தமிழக சட்டமன்றத்தில் தொழில் சார்ந்த பிரச்சினைக்கு தனி தீர்மானம் கொண்டு வந்து விவாதித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழில் துறைக்கான மின்சார நிலைக்கட்டணத்தை முழுமையாக திரும்பபெற வேண்டும். பீக்ஹவர் கட்டணம் முழுமையாக திரும்பபெற வேண்டும். தமிழ்நாட்டின் தொழில் நிலை சீரடையும் வரை குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு மின்கட்டண உயர்வு கைவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

# போதிய விலை கிடைக்காததால் சாமந்தி பூக்களை சாலையோரம் கொட்டிச் சென்ற விவசாயிகள்



தருமபுரி, நவ.7

தருமபுரி மாவட்டத்தில் பல ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் அனைத்து வகை பூக்களையும் சாகுபடி செய்து வருகின்றனர். இங்கு விளையும் பூக்களை தமிழகத்தின் பல மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலும் இருந்து வரும் மொத்த வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த புரட்டாசி மாதம் பூக்களின் விலை குறைந்து படு வீழ்ச்சியில் விற்பனை செய்யப்பட்டது. பின்னர் விஜயதசமி பண்டிகையையொட்டி பூக்களின் விலை உயர்ந்து கிலோ சாமந்திப்பூ ரூ. 200க்கும் செண்டுமல்லி ரூ .50 க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்பொழுது பூக்களின் வரத்து அதிகரிப்பால் சாமந்தி, செண்டுமல்லி பூக்கள் கிலோ ரூ. 5 முதல் முதல் ரூ. 10க்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. பூக்களை வாங்க வியாபாரிகள் வராததால் விற்பனை ஆகாத பூக்களை விவசாயிகள் ரோடு ஓரங்களில் கொட்டி செல்கின்றனர்.

தருமபுரி பென்னாகரம் ரோட்டில் இருந்து சேலம் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைக்கு செல்லும் பிரிவு சாலை ஓரத்தில் சாமந்தி மற்றும் செண்டு மல்லி பூக்களை விவசாயிகள் கொட்டி சென்றுள்ளனர்.

# எடப்பாடி அரசு ஆஸ்பத்திரி டாக்டர் மீது செவிலியர் பரபரப்பு புகார்

சேலம், நவ.7

சேலம் கலெக்டர் அலுவலகத்தில் இன்று காலை நர்சுகள் பொதுநல சங்க மாநில நிர்வாகிகள் எடப்பாடி அரசு மருத்துவமனையில் பணிபுரியும் செலிவியர் சார்பில் ஒரு புகார் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:சேலம் மாவட்டம் எடப்பாடி அரசு மருத்துவமனையில் நான் கடந்த 3 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். இதே மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் ஒரு டாக்டர் கடந்த சில மாதங்களாக தகாத வார்த்தைகளால் மிரட்டி எனக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தி வருகிறார். நான் இந்த மருத்துவமனைக்கு வந்த புதிதிலும் இதே போல மிரட்டி மன உளைச்சலை ஏற்படுத்தினார். பணியின்போதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருக்கிறார். நான் பணியை சரியாக செய்தபோதும் வேண்டுமென்றே கண்டிப்பது போல திட்டிவிட்டு பின் ஏன் என்னிடம் வந்து நீ மன்னிப்பு கேட்கவில்லை என கேட்டு இதே போன்று தொடர்ச்சியாக துன்புறுத்தி வருகிறார். மேலும் இரட்டை அர்த்தத்தில் பேசி வருகிறார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர் கூறியிருந்தார்.

# மேட்டுப்பாளையத்தில் கனமழை: 2 ஆயிரம் வாழைகள் சேதம்

மேட்டுப்பாளையம், நவ.7

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு வார மாக இரவு மற்றும் பகல் நேரங்களில் பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்து வருகிறது.

காரமடை அடுத்த புங்கம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் சுப்பையன். இவர் தோட்டத்தில் வாழை மரங்களை பயிரிட்டு இருந்தார். இந்த நிலையில் அங்கு நேற்று சூறாவளி காற்றுடன் கன மழை பெய்தது. இதில் அங்கு நின்ற 350 க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து சேதம் அடைந்தன. இதேபோல் சிறுமுகை, மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளிலும் 1500க்கும் மேற்பட்ட வாழைகள் சேதம் அடைந்து உள்ளன.

இன்னும் ஓரிரு வாரங்களில் குலைதள்ளும் தருவாயில் இருந்த வாழை மரங்கள் காற்றில் முறிந்து சேதம் அடைந்தது விவசாயிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவே அரசு அதிகாரிகள் உடனடியாக கள ஆய்வு நடத்தி, சேதம் அடைந்த வாழைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# சாலை, குடிநீர் வசதி கேட்டு பொதுமக்கள் மறியல்



ஸ்ரீபெரும்புதூர், நவ.7

படப்பை அருகே உள்ள செரப்பணஞ்சேரி ஊராட்சிக்குட்பட்ட நாவலூர் அரசு குடிசை மாற்று வாரியகுடியிருப்பில் 2800 குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். பனப்பாக்கம் பகுதியில் இருந்து நாவலூர் குடியிருப்பு பகுதிக்கு செல்லும் சாலை பயன்படுத்த முடியாத அளவுக்கு குண்டும் குழியுமாக சேதம் அடைந்து உள்ளது.

மேலும் குடிநீர், மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்பட்டு வந்தனர். இதுபற்றி அதிகாரிகளிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த அப்பகுதி பெண்கள் உள்பட சுமார் 500க்கும் மேற்பட்டோர் இன்று காலை திடீரென வண்டலூர்வாலாஜாபாத் நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சாலையின் இரு புறங்களிலும் வாகனங்கள் ஸ்தம்பித்து நின்றன. கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஒரகடம் போலீசார் மற்றும் அதிகாரிகள் விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி கலைந்து போகச்செய்தனர். இதனால் அப்பகுதியில் சுமார் 2 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



## நவம்பர் ரேஸில் களமிறங்கிய சந்தானம்

இயக்குனர்கல்யாண்புதியபடம்ஒன்றைஇயக்கியுள்ளார். இந்த படத்தில் நடிகர் சந்தானம் நடித்துள்ளார்.

'குலேபகாவலி', 'ஜாக்பாட்' , 'கோஸ்டி' போன்ற படங்களை இயக்கிய கல்யாண் தற்போது இயக்கியுள்ள திரைப்படம்'80ஸ்பில்டப்'.இதில்சந்தானம்கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக ராதிகா பிரீத்தி நடிக்கிறார். மேலும், கே.எஸ்.ரவிகுமார், ஆனந்த் ராஜ், மன்சூர் அலிகான், மொட்டை ராஜேந்திரன், மனோபாலா, மயில்சாமி, முனீஸ்காந்த், கூல் சுரேஷ் உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஸ்டூடியோ கிரீன் தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். ஜாக்கப் ரத்னராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். 80களில் நடக்கும் இந்தப் படத்தின் கதை, பேன்டசி டிராமாவாக உருவாகியுள்ளது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, '80ஸ் பில்டப்' திரைப்படம் நவம்பர் 24ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.



## நர்ஸாக மாறிய ஐஸ்வர்யா ராஜேஷ்

ஐஸ்வர்யா ராஜேஷ் புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இந்த படத்தை அறிமுக இயக்குனர் இயக்குகிறார்.

அறிமுக இயக்குனர் ரா.சவரி முத்து இயக்கத்தில் புதிய படம் ஒன்று உருவாகுகிறது. டார்லிங், இரும்புத்திரை, அண்ணாத்தே, ஹீரோ, மற்றும் மார்க் ஆண்டனி படங்களில் திரைக்கதை எழுத்தாளராக பணியாற்றிய ரா.சவரி முத்து இப்படம் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார்.

இந்த படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, சந்தானபாரதி, அர்ஜுன்சிதம்பரம், பக்ஸ், சேஷு, மாறன், ஆதித்யா கதிர், கராத்தே கார்த்தி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

மருத்துவமனையில் நர்ஸாக வேலை பார்க்கும் ஒரு பெண்ணின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களை கலகலப்பான காமெடியுடன், பரபரப்பான திரைக்கதையுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த படத்தை துவாரகா புரொடக்ஷன்ஸ் (Dwarka Productions) நிறுவனம் சார்பில் பிளேஸ் கண்ணன் ஶ்ரீலதா பிளேஸ் கண்ணன் தயாரிக்கின்றனர்.

இப்படத்தின் பூஜை, திரையுலக பிரபலங்களுடன் படக்குழுவினர் கலந்துகொள்ள நடைபெற்றது. தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் பரபரப்பாக நடைபெற்று வருகிறது.

## ஆபாச உடையில் ராஷ்மிகா மந்தனா: வைரலாகும் வீடியோ கடும் நடவடிக்கை எடுக்க கூறிய அமிதாப் பச்சன்..!



தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எந்த அளவுக்கு நல்லநல்லவிஷயங்களைகற்றுக்கொடுக்கிறதோ, அதேவேளையில் அதில் அதிகமான ஆபத்துக்களும்இருப்பதையாராலும்மறுத்துவிட முடியாது. சமீபகாலமாக டிரெண்டிங்கில் உள்ளது ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு டெக்னாலஜி. இதைப் பயன்படுத்தி எந்த ஒரு புகைப்படம் அல்லது வீடியோவை சுலபமாக மற்றொருவரின் முகத்தை வைத்து மார்பிங் செய்துவிட முடியும்.

அண்மையில் கூட தமன்னாவின் காவாலா டான்ஸ் வீடியோவை, நடிகை சிம்ரன் ஆடியது போல் அப்படியே தத்ரூபமாக மாற்றி காட்டி இருந்தது இந்த டெக்னாலஜி. அப்போது அந்த வீடியோவுக்கு பலரும் தத்ரூபமாக இருப்பதாக கமெண்ட் செய்து வந்தனர். நடிகை சிம்ரன் கூட அந்த வீடியோவை பார்த்து தான் நடனமாடியது போல் இருப்பதாக கூறி ஆச்சரியத்தில் மூழ்கி போனார்.

அந்த டெக்னாலஜியின் ஆபத்தை உணர்த்தும் ஒரு சம்பவம் தான் தற்போது அரங்கேறி உள்ளது. அதன்படி நடிகை ராஷ்மிகா மந்தனா ஆபாச உடையில் லிப்ட் ஒன்றில் செல்வது போன்ற வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது. இது உண்மை என நினைத்து பலரும் வைரலாக்கினர். ஆனால் உண்மையில் இது ஏஐ தொழில்நுட்பத்தால் மார்பிங் செய்யப்பட்ட வீடியோவாகும்.

இந்த வீடியோ வைரலான நிலையில், இதனை பார்த்து ஷாக் ஆன பாலிவுட் சூப்பர்ஸ்டார் அமிதாப்பச்சன், இதனை மார்பிங் செய்து வெளியிட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். நடிகை ராஷ்மிகாவும், அமிதாப் பச்சனும் குட் பாய் என்கிற திரைப்படத்தில் இணைந்து நடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கமலுடன் ஜோடி சேர்ந்த திரிஷா... வெளியான அதிகாரபூர்வ அறிவிப்பு...



கமல் ஹாசனின் 234வது படத்தின் பெயர் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்று மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளது.

நடிகர் கமல்ஹாசன் இயக்குனர் சங்கர் இயக்கத்தில் இந்தியன்2 படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்திற்கு பிறகு கமல்ஹாசனின் 234வது படத்தை இயக்குனர் மணிரத்னம் இயக்குகிறார். 37 வருடங்களுக்கு பிறகு இருவரும் இணையவுள்ளதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மெட்ராஸ் டாக்கீஸ், ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க ரவி கே சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார். தற்காலிகமாக 'KH 234' என பெயரிடப்பட்டுள்ள இந்த படத்தின் பெயர் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்று மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளது. ரசிகர்கள் படத்தின் தலைப்பை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் படத்தில் நடித்துள்ள முக்கிய நடிகர், நடிகைகள் குறித்த அறிவிப்பை படக்குழு ஒன்றன்பின் ஒன்றாக அறிவித்து வருகிறது. அதன்படி பிரபல மலையாள நடிகர் துல்கர் சல்மான் இந்த படத்தில் இணைத்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. தமிழில் ஓ காதல் கண்மணி, கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் உள்ளிட்ட படங்கள் மூலம் பிரபலமடைந்தவர் நடிகர் துல்கர் சல்மான். இவர் நடிப்பில் வெளியான 'சீதாராமன்' திரைப்படம் இவருக்கு இந்திய அளவில் ரசிகர்களை பெற்று தந்தது. தற்போது துல்கர் சல்மான் கமல் ஹாசனின் 234வது படத்தில் இணைந்துள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். மேலும் இந்த படத்தில் கதாநாயகியாக நடிகை திரிஷா நடிக்க உள்ளார். இதனை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. நடிகை திரிஷா மன்மதன் அம்பு, தூங்காவனம் உள்ளிட்ட படங்களுக்கு பிறகு இந்த படத்தில் கமலுடன் இணைந்து நடிக்க உள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## சூர்யாவுடன் இணையும் அமீர்... வாடிவாசல் படத்தின் புதிய அப்டேட் வெளியானது...!



தனுஷ் நடிப்பில் 2007ம் ஆண்டு வெளியான பொல்லாதவன் படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமானவர் வெற்றிமாறன். அதன்பின்னர் ஆடுகளம், விசாரணை, வடசென்னை, அசுரன், விடுதலை உள்ளிட்ட பல வெற்றி படங்களை இயக்கி உள்ளார். தற்போது விடுதலை படத்தின் 2 பாகத்தை இயக்கி வருகிறார்.

விடுதலை2 படத்திற்கு பிறகு இவர் சூர்யாவை வைத்து 'வாடிவாசல்' என்ற படத்தை இயக்க உள்ளார். வி.கிரியேஷன்ஸ் சார்பாக கலைப்புலி தாணு தயாரிக்கும் இப்படம் ஜல்லிக்கட்டு விளையாட்டை மையமாக வைத்து தயாராகிறது. மெரினா போராட்டம் மூலம் உலக அளவில் பிரபலமான ஜல்லிக்கட்டு படத்தில் சூர்யா நடிப்பதால் படத்துக்கு பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்ய உள்ள இப்படத்திற்கு, ஜிவி பிரகாஷ் இசையமைக்கிறார்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற இயக்குனர் வெற்றிமாறன் 'வாடிவாசல்' படத்தின் புதிய தகவலை வெளியிட்டுள்ளார். அவர் கூறியதாவது, 'வாடிவாசல் படத்தின் பணிகள் தொடங்கியுள்ளது. இந்த படத்தில் இயக்குனர் அமீர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளார். வட சென்னை படத்தில் ராஜனாக அமீர் நடித்திருந்தார். அப்போது நான் அவருக்கு சில விஷயங்களை சொல்லி கொடுக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால், வாடிவாசல் படத்தில் இவர் இருந்தால் பல விஷயங்களை என்னால் கற்றுக்கொள்ள முடியும்' என்று கூறினார்.

## 'அரசியலிலும் நீங்கள் சாதிக்க முடியும்.. துணிந்து இறங்குங்கள்' கமலுக்கு வாழ்த்து தெரிவித்த சிவகுமார்

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகரான கமல்ஹாசன் நாளை தனது 69வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இவரின் பிறந்தநாளை ரசிகர்கள் சிறப்பாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர். அவரின் 'மக்கள் நீதி மய்யம்' கட்சியின் சார்பாக மாநிலம் முழுவதும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இன்றே ரசிகர்கள் மற்றும் திரைபிரபலங்கள் பலர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். கமல்ஹாசனுக்கு நடிகர் சிவகுமார் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'நடிப்புக் கலையில் அசகாய சூரர்கள் என்று நான் மதித்துப்போற்றுபவர்கள்தமிழ்ச்சினிமாவில்நடிகர்திலகம்சிவாஜியும், உலகநாயகன் கமலும்தான். அவர்கள் செய்த 'வெரைட்டி ரோல்களை' இதுவரை வேறுயாரும் செய்ய முடியவில்லை. சிவாஜி நடித்த சரித்திர, சமூக, புராண வேடங்களை யாரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவு அவர் செய்துவிட்டார்.

கமல், நீங்கள் நடிப்பதோடு நில்லாமல், தேர்ந்த பரதக்கலைஞர், நடனக் கலையில் வல்லவர், பாடகர், திரைக்கதை ஆசிரியர், இயக்குனர், தயாரிப்பாளர்.. 'டூப்'போடாமல் அல்லாவுதீனும் அற்புத விளக்கும் படத்தில் நீங்கள் சிங்கத்தோடு மோதியவர் .. 'மீண்டும் ஒரு சூர்யோதயம்' படத்தில் ரன்வே ரோட்டில் பாய்ந்து ஓடிய குதிரை சறுக்கி கீழே விழ 20 அடி தூரம் குதிரையின் அடியில் உங்கள் கால் மாட்டி எலும்பு நொறுங்க நடித்தவர் நீங்கள்.

1973ல் அரங்கேற்றம், சொல்லத்தான் நினைக்கிறேன் என்று துவங்கி தங்கத்திலே வைரம், மேல்நாட்டு மருமகள் என 8 படங்களில் நாம் இருவரும் சேர்ந்து நடித்தோம். நான் கதாநாயகன், கமல், நீங்கள் பெரும்பாலும் வில்லனாக நடித்தீர்கள்.. வில்லன் வேடங்களில் நடித்து பெரிய ஹீரோவாக எங்கள் தலைமுறையில் உயர்ந்த முதல் நடிகர் நீங்கள் தான் கமல் !விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல உங்களுக்குள் இருந்த 'பொறி'யை கண்டவன் நான். அந்தச் செடி வளர்ந்து இன்று விருட்சமாகி 'நாயகன்', 'குணா', 'அன்பே சிவம்', 'ஔவை சண்முகி', 'ஹேராம் ' என்று நடிப்பின் இமயத்தைத் தொட்டுள்ளது.



நடிப்பில் இனி சாதிக்க உங்களுக்கு எதுவும் மிச்சம் இருப்பதாகத்தெரியவில்லை. அரசியல்களம் உங்களுக்காக காத்திருக்கிறது. அமெரிக்கா கொண்டாடிய ஆப்ரஹாம் லிங்கனே இரண்டு முறை தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த பின்னரே அதிபரானார். அரசியலிலும், திரையில் சாதித்ததை, நீங்கள்சாதிக்கமுடியும்..துணிந்துஇறங்குங்கள். நூறாண்டு நீவிர் வாழ்க...' என்று தெரிவித்துள்ளார்.



## பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்: இறுதிப்போட்டியில் போபண்ணாமேத்யூ எப்டன் ஜோடி தோல்வி

பாரீஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி பிரான்சில் நடந்தது. இதில் இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்திய வீரர் ரோகன் போபண்ணா மற்றும் ஆஸ்திரேலிய வீரரான மேத்யூ எப்டன் ஜோடி, சாண்டியாகோ கோன்சாலஸ் (மெக்சிகோ)எட்வர்ட் ரோஜர் வாசெலின் (பிரான்ஸ்) ஜோடியுடன் மோதியது.

இந்த போட்டியில் கோன்சாலஸ்ரோஜர் வாசெலின் ஜோடி 62, 57, 107 என்ற செட் கணக்கில் போபண்ணாமேத்யூ எப்டன் ஜோடியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

## பெண்களுக்கான ஆசிய சாம்பியன்ஸ் ஆக்கி: இந்திய அணி 'சாம்பியன்'




பெண்களுக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில் நடந்து வந்தது.

இதில் நேற்றிரவு நடந்த இறுதி ஆட்டத்தில் இந்தியா 40 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியன் ஜப்பானை வீழ்த்தி சாம்பியன்ஸ் கோப்பையை சொந்தமாக்கியது. அதில் சங்கீதா குமாரி 17வது நிமிடத்திலும், நேகா 46வது நிமிடத்திலும், லால்ரெம்சியாமி 57வது நிமிடத்திலும், வந்தனா கட்டாரியா 60நிமிடத்திலும் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து அசத்தினர்.

தொடர்ந்து 6 போட்டிகள் வென்று தோல்வி பக்கமே செல்லாமல் வீறுநடை போட்ட இந்தியா இந்த கோப்பையை கையில் ஏந்துவது இது 2வது முறையாகும். ஏற்கனவே 2016ம் ஆண்டில் வென்றிருந்தது. சாதனை படைத்த இந்திய வீராங்கனைகளை பாராட்டிய ஆக்கி இந்தியா அமைப்பு அவர்களுக்கு தலா ரூ.3 லட்சம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இதனிடையே 3வது இடத்துக்கான ஆட்டத்தில் சீனா 21 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தியது.



## தமிழ்நாடு செஸ் வீராங்கனை வைஷாலி சாதனை

பிரிட்டனில் நடைபெற்ற பிட் கிராண்ட் ஸ்விஸ் செஸ் தொடரில் தமிழக வீராங்கனை வைஷாலி சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிச் சுற்றில் மங்கோலிய வீராங்கனை பத்குயாக் முங்குந்துலுடன் வைஷாலி மோதினார். இந்த போட்டி டிராவில் முடிவுற்றது. எனினும் இத்தொடரில் அதிக புள்ளிகள் பெற்றவர் என்ற முறையில் சாம்பியன் பட்டத்தை வைஷாலி கைப்பற்றினார்.

இந்த வெற்றி மூலம் அடுத்தாண்டு கனடாவில் நடைபெற உள்ள மகளிருக்கான செஸ் கேண்டிடேட் தொடரில் விளையாடவும் வைஷாலி தேர்வாகி உள்ளார்.

ஏற்கனவே ஆண்கள் பிரிவில் உலகக்கோப்பையில் வெள்ளிப்பதக்கம் வென்றதன் மூலம் அவருடைய சகோதரர் பிரக்ஞானந்தா கேண்டிடேட் தொடருக்கு தேர்வாகிய நிலையில் தற்போது வைஷாலியும் மகளிர் பிரிவில் தேர்வாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் வரலாற்றில் முதல்முறையாக 'டைம்டு அவுட்' முறையில் அவுட் கொடுக்கப்பட்ட வீரரானார் மேத்யூஸ்



உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இன்றைய 38வது லீக் ஆட்டத்தில் இலங்கை வங்காளதேசம் மோதி வருகின்றன. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற வங்காளதேசம் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து, இலங்கை அணியின் தொடக்க வீரர்களாக நிசாங்கா, குசல் பரேரா களமிறங்கினர். பரேரா 4 ரன்னில் அவுட் ஆனார். அடுத்துவந்த மெண்டிஸ் 19 ரன்னில் அவுட் ஆனார். நிதானமாக ஆடிய நிசங்கா 41 ரன்னில் அவுட் ஆனார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சமரவிக்ரமா 42 பந்துகளில் 41 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஷகீப் பந்துவீச்சில் கேட்ச் மூலம் அவுட் ஆனார்.

அடுத்த வீரராக மேத்யூஸ் களமிறங்கினார். மேத்யூஸ் களத்திற்குள் நுழைந்தபோது அவரது ஹெல்மெட்டில் ஏதோ பிரச்சினை இருந்துள்ளது. இதை கவனித்த மேத்யூஸ் பேட்டிங் செய்யாமல் தனது ஹெல்மெட்டை மாற்ற களத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

இதனால், அவர் 2 நிமிடங்களுக்கு மேல் பேட்டிங் செய்யாமல் களத்திலேயே நின்றுள்ளார். அப்போது டைம் அவுட் முறையில் மேத்யூசை அவுட் என அறிவிக்க வேண்டுமென, வங்காளதேச கேப்டன் ஷகீப் அல்ஹசன் நடுவரிடம் முறையிட்டார். இதனை தொடர்ந்து டைம் அவுட் முறையில் மேத்யூஸ் அவுட் ஆனதாக நடுவர் அறிவித்தார். இதனால் அதிர்ச்சியடைந்த மேத்யூஸ் ஒருபந்து கூட விளையாடாமல் (0) ரன்னில் அவுட் ஆனார். மேலும், கிரிக்கெட் வரலாற்றில் டைம் அவுட் முறையில் அவுட் ஆன முதல் வீரரானார் மேத்யூஸ்.

டைம் அவுட் முறை அவுட்: விக்கெட் விழுந்த உடன் களத்திற்கு புதிதாக வரும் பேட்ஸ்மேன் 2 நிமிடங்களில் தயாராக இருக்கவேண்டும். 2 நிமிடங்களில் பேட்டிங் செய்ய தயாராகவில்லையென்றால் அந்த வீரரை டைம்டு அவுட் முறையில் அவுட் ஆக அறிவிக்கலாம் என ஐசிசி விதி உள்ளது. அந்த விதியின் அடிப்படையில் முதல் வீரராக மேத்யூஸ் அவுட் என அறிவிக்கப்பட்டுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.